**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**
**DEPOSITION OF WITNESS**

| Case No | : | SC.77/2019 | Village | : | |
|---|---|---|---|---|---|
| Prosecution witness | : | PW- 8 | Taluk | : | |
| Name | : | **திரு.மோகன்** | Occupation | : | |
| Father Name | : | **திரு. காமராஜ்** | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.7.2025**

**All accused present.**

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் சாலைக்கார தெரு, பழைய மாரியம்மன் கோவில், கீழவாசல், தஞ்சாவூரில் வசித்து வருகிறேன். தற்போது நான் அரசு பொது வினியோக திட்ட கொள்முதல் நிறுவனத்தில் காவலராக பணியாற்றி வருகிறேன். சம்பவ சமயத்தில் விவசாய பணி செய்தேன். என் வீட்டிற்கு எதிர் வீட்டை சேர்ந்த அப்பு என்ற ஜெயகாந்தனை தெரியும் அவர் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகள் எல்லோரையும் தெரியும். அவர்கள் எங்கள் பகுதி மற்றும் பக்கத்து பகுதிகளை சேர்ந்தவர்கள். 18.1.2018 அன்று இரவு 9 3/4 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது இறந்துபோன அப்பு என்பவருடைய அப்பா சின்னராசு யாராவது வாங்கடா என்று சத்தம் போட்டார். நான் ஓடி போய் பார்த்தபோது பக்கத்துவீட்டில் இருந்த ஆரோக்கிய முருகன், கணேசன், இளஞ்செழியன் ஆகியோர் ஓடி வந்தார்கள். நாங்கள் போய் என்ன என்று கேட்டோம். ஆதிமாரியம்மன்கோவில் ஒயின்ஷாப்பில் அப்புவிடம் கரம்பை தெருவை சேர்ந்த பசங்கள் பிரச்சனை செய்கிறார் என்று ராஜேந்திரன் சொன்னார். நாங்கள் வண்டியை எடுத்து கொண்டு அந்த ஒயின்ஷாப்பிற்கு போனோம். அப்போது அப்பு நடுவில் நிற்க சுற்றிலும் பத்து நபர்கள் இருந்தார்கள். கலிவரதன் என்கிற விவேகானந்தன் அப்பு தலையில் வெட்டினான், சுரேஷ் இரண்டாவது வெட்டினான், முத்தமிழ் செல்வனும் ராமனும் அதன்பிறகு வெட்டினார்கள் அப்பு கீழே விழுந்துவிட்டார் மற்றவர் எல்லோரும் இடது பக்கம் தலையில் வெட்டி சிதைத்துவிட்டார்கள். அதன்பிறகு அங்கிருந்து வண்டியை எடுத்து கொண்டு பைபாஸ்ஸில் போனார்கள். அப்புவின் அப்பா அங்கு நின்று அழுது கொண்டிருந்தார். அவரை அழைத்து கொண்டு தாலுக்கா காவல்நிலையத்திற்கு போனோம். அங்கு அப்பு அப்பா பதட்டத்தில் எழுத முடியாததால் அவர் வாயால் சொல்ல சொல்ல போலிஸார் எழுதினார்கள். அப்பு அப்பாவிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதன்பிறகு நாங்கள் எல்லோரும் கொலை நடந்த இடத்திற்கு போனோம். அப்போது இரவு 11.30 லிருந்து 11.45 இருக்கும். ஆம்புலன்ஸ் வந்து

அப்புவின் பாடியை எடுத்து போனது. அப்போது மணி 12ஐ தாண்டிவிட்டது. தாலுக்கா காவல்நிலைய ஆய்வாளர் அம்மா என்னை விசாரித்தார் அப்போது மணி விடியற்காலை 12 1/2 இருக்கும். நடந்தவற்றை நான் சொல்லிவிட்டு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு போனேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள். போஸ்ட் மாடம் செய்து பாடியை கொடுத்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

சின்னராசு என்பவருடன் நானும் காவல்நிலையத்திற்கு போனேன் என்றால் ஆமாம். சின்னராசு சொல்லசொல்ல ஆய்வாளர் எழுதிகொண்டாரா என்றால் போலிஸ்காரர் எழுதினார். எனக்கு போலிஸார் உதவிஆய்வாளர், ஆய்வாளர் தனிதனியே அடையாளப்படுத்தி தெரியுமா என்றால் ஆமாம். காவல்நிலையத்திலேயே அவர் சொல்லசொல்ல எழுதி கொண்டார்கள் என்றால் ஆமாம். அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் வண்டி எடுத்துகொண்டு போனனோம் என்று சொன்னேனா ஆய்வாள ர் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். வாகனத்தில் போனதாக போலிஸாரிடம் சொல்லவில்லை என்றும், நாங்கள் ஓடிசென்றோம் என்றும், சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அங்கு எத்தனை வருடமாக குடியிருக்கிறேன் என்றால் பிறந்திலிருந்தே அங்கு இருக்கிறேன். சாலைக்கார தெருவிலிருந்து ஆதி மாரியம்மன்கோவில் தெரு 3 கி. மீ இருக்கும் என்றால் 300 மீட்டர் இருக்கும். சாலைக்கார தெருவிலிருந்து அண்ணாநகர் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீ இருக்கும். அண்ணாநகரிலிருந்து காமராஜர் தெரு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 60, 70 மீ இருக்கும் காமராஜர் நகருக்கு பிறகுதான் ஆதிமாரியம்மன்கோவில் வரும் என்றால் ஆமாம். சாலைக்கார தெருவிற்கும் புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலுக்கும் 4 கி. மீ இருக்கும் என்றால் ஆமாம். புன்னை நல்லூர் மாரியம்மன்கோவிலுக்கும், ஆதிமாரியம்மன் கோவிலுக்கும் 100, 150 மீ என்றால் இல்லை 2 கி. மீ இருக்கும். நான் வசிப்பதாக சொல்லும் சாலைக்கார தெரு 1/4 கி.மீ நீளம் என்றால் ஆமாம். அந்த 1/4 கி. மீ தூரமும் இருபுறமும் வீடுகள் உள்ளது என்றால் காலியிடங்களும் உள்ளது. நான் அங்கிருந்து போகும்போது தனியாக போனேனா என்றால் நானும் செழியனும் போனோம். ராஜேந்திரனும் சின்னராஜம் ஒன்றாக வந்தார். இறந்துபோன அப்பு என்கிறஜெயகாந்தன் மீது நிறைய குற்ற வழக்குகள் உள்ளது என்றால் கேள்விபட்டுள்ளேன். அவரிடம் நல்லபேச்சுவார்த்தை உண்டா என்றால் நெருங்கிய பேச்சுவார்த்தை இல்லை. பாரும் ஒயின்ஷாப்பும் ஒரே கட்டிடமா என்றால் தனிதனி கட்டிடம் ஒரே சுவர். பார் 10 மணிக்கு மூடிவிடுவார்கள் என்றால் ஆமாம். நான் போகும்போது அப்பு

ஜெயகாந்தன் ரோட்டில் இருந்தாரா, பார் உள்ளே இருந்தாரா என்றால் பார் உள்ளே இருந்தார். நான் போகும்போது வேறு யாரும் இல்லை என்றால் கூட்டம் இருந்தது. எவ்வளவு பேர் என்றால் 30, 40 இருக்கும். ராஜேந்திரனிடம் இருசக்கர வாகனம் உள்ளதா சைக்கிள் உள்ளதா என்றால் தெரியவில்லை. அவர் சொல்லும்போது மணி எவ்வளவு என்றால் 9 .45. நாங்கள் எல்லோரும் பாருக்கும் போகும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 9.50. நாங்கள் யாரும் தடுக்க முயற்சிக்கவில்லை என்றால் இல்லை. காவல்நிலையத்திற்கு திரும்பி செல்லும்போது சாலைக்கார தெரு எங்கள் வீட்டு வழியாக போனோம் என்றால் ஆமாம். அவ்வாறு போகும்போது அப்பு விட்டிலோ எங்கள் வீட்டிலோ அப்புவை வெட்டிவிட்டதாக சொல்லிவிட்டு போகவில்லை என்றால் ஆமாம். அப்பு சின்னராசும் தனிதனியே வசிக்கிறார் என்றால் ஒரே வீட்டில் வசிக்கிறார். அப்பு அன்று குடித்திருந்தாரா என்றால் தெரியவில்லை. நாங்கள் போனபிறகு போலிஸார் வந்தாரா என்றால் ஆமாம். திரும்ப போலிஸார் வரும்போது சாலைக்கார தெரு வழியாக வந்தார்கள் என்றால் ஆமாம். அப்போதும் வீட்டில் இறங்கி சொல்லவில்லை என்றால் ஆமாம். நாங்கள் காவல்நிலையத்திற்கு செல்லுவதற்கு முன்பாக அப்புவை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முயற்சி செய்யவில்லையா என்றால் அவ்விடத்திலேயே இறந்துவிட்டார். போலிஸார் விசாரிக்கும்போது அப்பு இறந்துவிட்ட விஷயத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் எதுவும் அப்புவை துக்கினேனா என்றால் இல்லை. சாலைக்கார தெருவில் அனைவரும் உறவினர் என்றால் இல்லை ஒரே இனத்தை சேர்ந்தவர்கள். நாங்கள் காவல்நிலையத்திலிருந்து வீட்டிற்கு போனனேமா என்றால் நானும் சின்னராசும் போகவில்லை. சின்னராசு வீட்டிற்கும் என் வீட்டிற்கும் அப்பு இறந்த விஷயம் யார் தகவல் சொன்னது என்றால் நான் சொல்லவில்லை. சின்னராஜம் நானும் ஒன்றாக மருத்துவமனையில் இருந்தோம் என்றால் இல்லை அவரும் இருந்தார் நானும் இருந்தேன். அன்றையதேதியில் பாரில் இருந்த 30 பேரும் எங்கள் தெருவை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. சுரேஷ் தலையில் வெட்டினான் என்ற விஷயத்தை போலிஸாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அதேபோல் மற்ற நபர்கள் சேர்ந்து ஒன்றாக இடது பக்க தலையை சிதைத்து விட்டதாக சொன்னேனே அதை போலிஸாரிடம் சொன் னேனா என்றால் சொன்னேன். நாங்கள் எல்லாரும் போகும்போது அப்புவை சுற்றி எத்தனைபேர் இருந்தார்கள் என்றால் 10 பேர். பார்ஒட்டி வீடு இருக்கிறதா என்றால் பாரை ஒட்டி ஒயின்ஷாப்தான் உள்ளது. சாலைக்கார தெருவிற்கும் ஆதிமாரியம்மன்கோவிலுக்கும் 5 கி.மீ இருக்கும் என்றும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணியாளர் இருந்தாரா என்றால் பிரச்சனை ஆனதும் கடையை சாத்திவிட்டு போய்விட்டார்கள். ஆதிமாரியம்மன்கோவிலுக்கும் தாலுக்கா

காவல்நிலையத்திற்கு இடையே எத்தனை கி.மீ என்றால் 3 கி. மீ இருக்கும். நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு போலிஸ் வாகனத்தில் வந்தோமா என்றால் சொந்த வாகனத்தில் வந்தோம். நான் முதல்விசாரணையில் சொல்வதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் நான் சொல்வதுபோல் சம்பவஇடத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலிஸார் கேட்டு கொண்டதற்கிணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் ஆமாம்.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.